# தேவாரம், திருவாசகம்,...... - 2

## Table of Contents

சமயாசாரியர்கள் துதி....1
8.1 திருவாசகம் - சிவபுராணம் ....2
6.56 திருநாவுக்கரசர் தேவாரம் - போற்றித் திருத்தாண்டகம் - திருக்கயிலாயம்....4
6.57 திருநாவுக்கரசர் தேவாரம் - போற்றித் திருத்தாண்டகம் - திருக்கயிலாயம்....6
1.52 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருநெடுங்களம்....9
1.116 திருஞானசம்பந்தர் தேவாரம் - பொது - திருநீலகண்டம்....11
2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருக்காறாயில்....13
5.92 திருநாவுக்கரசர் தேவாரம் - பொது - காலபாசத் திருக்குறுந்தொகை....15
3.4 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருஆவடுதுறை....16
2.24 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருநாகேச்சுரம்....18
4.66 திருநாவுக்கரசர் தேவாரம் - திருநாகேச்சரம்....20
7.1 சுந்தரர் தேவாரம் - திருவெண்ணெய்நல்லூர்....22
7.39 சுந்தரர் தேவாரம் - திருத்தொண்டத் தொகை....23
8.37 திருவாசகம் - பிடித்த பத்து....26
9.20 கண்டராதித்தர் அருளிச்செய்த திருவிசைப்பா - கோயில் (சிதம்பரம்)....28
9.29 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு....29
10. திருமூலர் அருளிய திருமந்திரம்....29
11. பதினொன்றாம் திருமுறை....30
12. சேக்கிழார் அருளிய பெரிய புராணம்....31
வாழ்த்து....32

### சமயாசாரியர்கள் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி
*- ( உமாபதி சிவம் )*

11.34.42 பெறுவது நிச்சயம் அஞ்சல் நெஞ்சே, பிரமாபுரத்து 11.34.42
மறுவறு பொற்கழல் ஞானசம்பந்தனை வாழ்த்துதலால்,
வெறியுறு கொன்றை மறியுறு செங்கை, விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெருமான் அமர் பொன்னுலகே.
*- ( ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள் )*

11.33.24 நற்றவன், நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் 11.33.24
பெற்றவன், மற்று இப்பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன், உற்ற விடம் அடையார் இட ஒள்ளமுதாத்
துற்றவன், ஆமூரில் நாவுக்கரசு எனும் தூ மணியே.
*- ( திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள் )*

11.33.08 தொழுதும் வணங்கியும் மாலயன் தேடு அருஞ்சோதி சென்று, ஆங்கு 11.33.08
எழுதும் தமிழ்ப் பழ ஆவணம் காட்டி, எனக்கு உன் குடி
முழுதும் அடிமை, வந்து ஆட்செய் எனப் பெற்றவன், முரல் தேன்
ஒழுகும் மலரின் நற்றார் எம்பிரான் நம்பி ஆரூரனே.
- ( *திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள்* )

*(திருவாசகச் சிறப்பு):*

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## 8.001 8.1 திருவாசகம் - சிவபுராணம் 8.001

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு[ம்]மலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே! தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

6.56

## 6.56 திருநாவுக்கரசர் தேவாரம் - போற்றித் திருத்தாண்டகம் - திருக்கயிலாயம் 6.56

பொறையுடைய பூமிநீர் ஆனாய் போற்றி 1
    பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
    நீங்காதென் உள்ளத்து இருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
    வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்டம் உடையாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

முன்பாகி நின்ற முதலே போற்றி 2
    மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க்கு அணியாய் போற்றி

ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மாலை எழுந்த மதியே போற்றி 3
மன்னியென் சிந்தை இருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி 4
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படரும் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரின் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் உள்ளத்து இருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மைசேர்ந்த கண்ட மிடற்றாய் போற்றி 5
மாலுக்கும் ஓராழி ஈந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் உள்ளத்து இருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீறு ஆடீ போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனல்ஏந்தி ஆடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஆறேறு சென்னி முடியாய் போற்றி 6
அடியார்கட்கு ஆரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி உடையாய் போற்றி
நீங்காதென் உள்ளத்து இருந்தாய் போற்றி
கூறேறும் அங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமை ஏழு ஆனாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

*('கூரேறு', 'காரேறு' என்பன, எதுகைக்காகத் திரிந்தன; கூறேறு - கூறு செய்தல் பொருந்திய` என்றும் கொள்ளலாம்; கண்ட மிடறு - ஒரு பொருட்பன்மொழி*

*என்றும் கொள்ளலாம்;)*

அண்டம் ஏழு அன்று கடந்தாய் போற்றி 7
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
பாரோர்விண் ஏத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவும் இடத்தாய் போற்றி
தொழில்நோக்கி ஆளும் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பெருகி அலைக்கின்ற ஆறே போற்றி 8
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் உள்ளாய் போற்றி
ஊனம் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரும் இகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு[ம்] நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி 9
தேடியுணராமை நின்றாய் போற்றி
பொய்யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னை ஆட்கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ்சு உகந்தாய் போற்றி
மிக்கார்கள் ஏத்தும் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி 10
மேலாடு புர[ம்]மூன்றும் எய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை அன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையும் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(*காலத்தால் = காலதனால் என்பது மருவிற்று;)*

6.57

## 6.57 திருநாவுக்கரசர் தேவாரம் - போற்றித் திருத்தாண்டகம் - திருக்கயிலாயம் 6.57

பாட்டான நல்ல தொடையாய் போற்றி 1
பரிசை அறியாமை நின்றாய் போற்றி

சூட்டான திங்கள் முடியாய் போற்றி
    தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டானது அஞ்சும் அமர்ந்தாய் போற்றி
    அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

(*பரிசு - உண்மை நிலை; சூட்டு - கண்ணி; ஆட்டு - ஆட்டப்படும் பொருள்; ஆனது - பசுவினது;*)

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி 2
    ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
    சாம்பர்மெய் பூசும் தலைவா போற்றி
எதிரா உலகம் அமைப்பாய் போற்றி
    என்றும் மீளா அருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

(*சதுரா - திறனுடையவனே; சதுரக்குழை - சிறந்து விளங்குங் குழை; எதிரா - இணையில்லாத;*)

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி 3
    செல்லாத செல்வம் உடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
    ஆகாய வண்ணம் உடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
    வேளாத வேள்வி உடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

(*ஐ - வியப்பு; தலைமை; அணியாய் - அண்மையில் உள்ளவனே; விடங்கம் - அழகு; ஆண்மை; இளமை;*)

ஆட்சி உலகை உடையாய் போற்றி 4
    அடியார்க்கு அமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிதும் இலாதாய் போற்றி
    சூழ்ந்த கடல்நஞ்சம் உண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
    மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிதும் அரியாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

(*சூட்சி - சூழ்ச்சி மருவி வந்தது - வஞ்சனை;*)

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி 5
மூவாத மேனி உடையாய் போற்றி
என்னியாய் எந்தை பிரானே போற்றி
ஏழின் இசையே உகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமும் தந்திரமும் ஆனாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(*முன்னியாய் - முனியாய் என்பதன் விரித்தல் விகாரம்;*
*என்னியாய் = என் + யாய் = என் அன்னை; கன்னி - அழிவின்மை;*)

உரியாய் உலகினுக்கு எல்லாம் போற்றி 6
உணர்வென்னும் ஊர்வது உடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
ஏசுமா முண்டி உடையாய் போற்றி
அரியாய் அமரர்கட்கு எல்லாம் போற்றி
அறிவே அடக்கம் உடையா போற்றி
கரியானுக்கு ஆழியன்று ஈந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(*ஏசுமா முண்டி - இகழுமாறு மண்டையோட்டை;*
*அடக்கம் - நுணுகி இருத்தல்; கரியானுக்கு ஆழி - மாலுக்குச் சக்கரம்;*)

எண்மேலும் எண்ணம் உடையாய் போற்றி 7
ஏறறிய ஏறும் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித்து இருந்தாய் போற்றி
பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கள் மேலார்கள் மேலாய் போற்றி
கண்மேலும் கண்ணொன்று உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(*பாவித்து - நினைத்து; பண்ணொடியாழ் = பண்ணொடு + யாழ்;*)

முடியார் சடையின் மதியாய் போற்றி 8
முழுநீறு சண்ணித்த மூர்த்தீ போற்றி
துடியார் இடைஉமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்றும் எய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

*(முழுநீறு சண்ணித்த - மேனி முழுதும் திருநீறு பூசிய; துடி - உடுக்கை; கடியார் - கொடியவர்;)*

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி 9
புண்ணியனே நண்ணல் அரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தாய் போற்றி
எண்ணாயிர நூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

*(போற்றிசைத்து - போற்றி இசைத்து; ஏறு - இடி; ஏறு என்பது ஏற்று என்றானது. ஏற்றிசைக்கும் - இடி ஒலிக்கும்; காற்று இசைக்கும் - காற்று ஒலிக்கின்ற;)*

1.52

## 1.52 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருநெடுங்களம் 1.52

"மறை உடையாய்; தோல் உடையாய்; வார் சடை மேல் வளரும் 1
பிறை உடையாய்; பிஞ்ஞகனே" என்(று) உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய்; கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர் களையாய்; நெடுங்கள[ம்] மேயவனே.

கனைத்(து) எழுந்த வெண் திரை சூழ் கடல் இடை நஞ்சுதன்னைத் 2
தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ; நின்னை
மனத்(து) அகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப் பகலும்
நினைத்(து) எழுவார் இடர் களையாய்; நெடுங்கள[ம்] மேயவனே.

நின் அடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத 3
"என் அடியான் உயிரை வவ்வேல்" என்(று) அடல் கூற்(று) உதைத்த
பொன் அடியே பரவி, நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர் களையாய்; நெடுங்கள[ம்] மேயவனே.

*(வவ்வுதல் - கவர்தல்; அடல் - கொல்லுகை; கூற்று - எமன்; பரவுதல் - துதித்தல்; புகழ்தல்; பாடுதல்;)*

மலை புரிந்த மன்னவன்தன் மகளை ஓர் பால் மகிழ்ந்தாய்; 4
அலை புரிந்த கங்கை தங்கும் அவிர்சடை ஆரூரா;
தலை புரிந்த பலி மகிழ்வாய்; தலைவ; நின் தாள் நிழல் கீழ்
நிலை புரிந்தார் இடர் களையாய்; நெடுங்கள[ம்] மேயவனே.

*(புரிதல் - விரும்புதல்; மிகுதல்; கொடுத்தல்; தியானித்தல்; செய்தல்; அவிர்தல் - பிரகாசித்தல்; நிழல் - ஒளி; புகலிடம்; ஸ்தானம்;)*

பாங்கின் நல்லார், படிமம் செய்வார், பாரிடமும் பலி சேர் 5
தூங்கி நல்லார் பாடலோடு தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும் தலைவ, நின் தாள் நிழல் கீழ்
நீங்கி நில்லார் இடர் களையாய்; நெடுங்களம்[ம்] மேயவனே.

(*பாங்கு - தகுதி; இயல்பு; குணம்; படிமம் - தவ வேடம்; விரதம்;*
*பாரிடம் - பூமி; பூதம்; தூங்குதல் - கூத்தாடுதல்; நிலையாகத் தங்குதல்;*)

விருத்தன் ஆகிப், பாலன் ஆகி, வேதம் ஓர் நான்(கு) உணர்ந்து 6
கருத்தன் ஆகிக், கங்கையாளைக் கமழ் சடை மேல் கரந்தாய்;
அருத்தன் ஆய ஆதி தேவன் அடி இணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர் களையாய்; நெடுங்களம்[ம்] மேயவனே.

(*கருத்தன் - அனைத்தையும் படைத்தவன் ('கர்த்தா');*
*கரத்தல் - மறைத்தல்; கரந்தாய் - 'கரந்தவனே' என்ற விளி;*
*அருத்தன் - மெய்ப்பொருளாய் உள்ளவன்;*)

கூறு கொண்டாய்; மூன்றும் ஒன்றாக் கூட்டி ஓர் வெங்கணையால் 7
மாறு கொண்டார் புரம் எரித்த மன்னவனே; கொடி மேல்
ஏறு கொண்டாய்; சாந்தம் ஈ(து) என்(று) எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர் களையாய்; நெடுங்களம்[ம்] மேயவனே.

(*மூன்றும் ஒன்றாக் கூட்டி - அக்கினி, வாயு, திருமால் ஆகிய மூன்றையும்*
*ஒன்றாகச் சேர்த்து. மாறு - பகை; ஏறு - எருது; சாந்தம் - சந்தனம்;*)

"குன்றின் உச்சி மேல் விளங்கும் கொடி மதில் சூழ் இலங்கை 8
அன்றி நின்ற அரக்கர் கோனை அரு வரைக் கீழ் அடர்த்தாய்"
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர் களையாய்; நெடுங்களம்[ம்] மேயவனே.

(*அன்றுதல் - பகைத்தல்; கோபித்தல்; அரு வரை - கயிலைமலை;*
*அடர்த்தல் - நசுக்குதல்; வாய்மொழி - உண்மைமொழி; வேதம்;*)

வேழ வெண் கொம்(பு) ஒசித்த மாலும், விளங்கிய நான்முகனும் 9
சூழ எங்கு[ம்] நேட, ஆங்(கு) ஓர் சோதியுள் ஆகி நின்றாய்;
கேழல் வெண் கொம்(பு) அணிந்த பெம்மான் கே(டு) இலாப் பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர் களையாய்; நெடுங்களம்[ம்] மேயவனே.

(*ஒசித்தல் - முறித்தல்; நேடுதல் - தேடுதல்; கேழல் - பன்றி;*)

வெஞ்சொல் தஞ்சொல் ஆக்கி நின்ற வேடம் இலாச் சமணும் 10
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் தத்துவம் ஒன்(று) அறியார்;

துஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திர[ம்] நின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர் களையாய்; நெடுங்கள[ம்] மேயவனே.

(*துஞ்சுதல் - அழிதல்; வாய்மொழி - வேதம்;*)

நீட வல்ல வார் சடையான் மேய நெடுங்களத்தைச் 11
சேடர் வாழு[ம்] மா மறுகின் சிரபுரக் கோன், நலத்தால்
நாட வல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே.

(*நீடுதல் - நீளுதல்; வார் சடை - நீண்ட சடை; சேடன் - பெரியோன்;*
*மறுகு - தெரு; பனுவல் - பாட்டு; நூல்; பறைதல் - அழிதல்;*)

1.116

## 1.116 திருஞானசம்பந்தர் தேவாரம் - பொது - திருநீலகண்டம் 1.116

அவ்வினைக்கு இவ்வினை ஆமென்று சொல்லும் அஃதறிவீர் 1
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான்கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனிமனத்தால் 2
"ஏவினையால் எயில்மூன்(று) எரித்தீர்" என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*கா - சோலை. தொட்டும் - தோண்டியும். ஏ வினையால் - அம்பின்*
*தொழிலால்;*)

முலைத்தட[ம்] மூழ்கிய போகங்களு[ம்] மற்றெவையும் எல்லாம் 3
விலைத்தலை யாவணம் கொண்டு எமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டு[ம்] மழுவும் இவையுடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*விலைத்தலையாவணம் = விலைத்து அலையா வண்ணம் / விலைத்தலை*
*ஆவணம்; சிலைத்து - ஒலித்து;*)

விண்ணுலகு ஆள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும் 4
புண்ணியர் என்று இரு போதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

மற்றிணை இல்லா மலைதிரண்டன்ன திண்தோள் உடையீர் 5
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்

செற்றெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*மற்று இணை இல்லா - வேறு ஒப்பு இல்லாத;*
*கிற்று - வலிமைகொண்டு; சொல் துணை வாழ்க்கை - சொல்லப்படுகிற*
*துணைகள் பலவற்றோடும் கூடிய வாழ்க்கை; செற்று - வருத்தி;*)

மறக்கு[ம்] மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப் 6
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்து உமை ஏத்தும் பணி அடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*வற்புறுத்துதல் - உறுதிப்படுத்திச் சொல்லுதல்; வலிமைப்படுத்துதல்;*
*சிறப்பு இல் இத்தீவினை - சிறப்பற்ற இந்தத் தீவினை;*)

........................................................ 7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்து உம் கழலடிக்கே 8
உருகி மலர்கொடு வந்து உமை ஏத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*செரு இல் அரக்கன் - போரில்லாத இராவணன்;*
*திரு இல் இத் தீவினை - சிவஞானச் செல்வத்தை இல்லதாக்கும் தீவினை;*)

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து 9
தோற்றம் உடைய அடியு[ம்] முடியும் தொடர்வரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*நாற்றம் - மணம்; சீற்றம் - கோபம்;*)

சாக்கியப் பட்டும் சமண் உரு ஆகி உடையொழிந்தும் 10
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(*இருதலைப் போகம் - இம்மை மறுமை இன்பம்.*
*தீக்குழித் தீவினை - தீக்குழியினைப் போலக் கனலுவதாகிய தீவினை;*)

பிறந்த பிறவியில் பேணிஎம் செல்வன் கழல்அடைவான் 11
இறந்த பிறவிஉண்டாகில் இமையவர் கோன்அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே.

## 2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருக்காறாயில்



நீரானே நீள்சடைமேல், ஒர் நிரைகொன்றைத் 1
தாரானே, தாமரைமேல் அயன்தான் தொழும்
சீரானே, சீர்திகழும் திருக் காறாயில்
ஊரானே, என்பவர் ஊனம் இலாதாரே.

*(நிரை - வரிசை; தார் - மாலை; சீர் - புகழ்; ஊனம் - பிறவி முதலிய குறைகள்;)*

மதியானே, வரிஅரவோடுடன் மத்தஞ் சேர் 2
விதியானே, விதியுடை வேதியர்தாம் தொழும்
நெதியானே, நீர்வயல்சூழ் திருக் காறாயில்
பதியானே, என்பவர் பாவம் இலாதாரே.

*(மதி - பிறைச்சந்திரன்; அரவு - பாம்பு; மத்தம் - ஊமத்தம்பூ; விதியான் - ஊழானவன்; நெதி - நிதி, செல்வம்;)*

விண்ணானே, விண்ணவர் ஏத்தி விரும்புஞ் சீர் 3
மண்ணானே, மண்ணிடை வாழும் உயிர்க்கெல்லாம்
கண்ணானே, கடிபொழில்சூழ் திருக் காறாயில்
எண்ணானே, என்பவர் ஏதம் இலாதாரே.

*(மண் - மண்ணுலகம்; கடி - மணம்; எண்ணான் - உள்ளத்திலிருப்பவன்; எண்ணுதற்குப் பொருளாயிருப்பவன்; ஏதம் - குற்றம், கேடு, துன்பம்;)*

தாயானே, தந்தையும் ஆகிய தன்மைகள் 4
ஆயானே, ஆயநல் அன்பர்க்(கு) அணியானே,
சேயானே, சீர் திகழும் திருக் காறாயில்
மேயானே, என்பவர் மேல் வினை மேவாவே.

*(அணியான் - மிக அருகில் இருப்பவன்; சேயான் - தொலைவில் இருப்பவன்; மேவுதல் - பொருந்துதல்;)*

கலையானே, கலைமலி செம்பொற் கயிலாய 5
மலையானே, மலைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையானே, சீர் திகழும் திருக் காறாயில்
நிலையானே, என்பவர் மேல் வினை நில்லாவே.

*(கலையான் - ஞான வடிவினன்; மலைபவர் - போர்செய்பவர்; சிலை - வில்;)*

ஆற்றானே, ஆறணி செஞ்சடை ஆடர(வு) 6
ஏற்றானே, ஏழுலகும் இமையோர்களும்
போற்றானே, பொழில் திகழும் திருக் காறாயில்

நீற்றானே, என்பவர் மேல் வினை நில்லாவே.

(*ஆறு - வழி; ஆற்றான் - வேதாகம வழியினன்; ஆடரவு - ஆடும் பாம்பு; ஏற்றான் - தாங்கியவன்; இமையோர் - தேவர்; நீற்றான் - திருநீற்றை அணிந்தவன்;*)

சேர்த்தானே தீவினை தேய்ந்தறத், தேவர்கள் 7
ஏத்தானே, ஏத்துநன் மாமுனிவர்க்(கு) இடர்
காத்தானே, கார்வயல் சூழ் திருக் காறாயில்
ஆர்த்தானே, என்பவர் மேல் வினை ஆடாவே*.

(*ஏத்துதல் = புகழ்தல்; ஏத்தான் - புகழப்படுபவன்; ஆர்த்தல் - நிறைதல்; ஆடா - வெல்லா;*
* "அடராவே" என்றும் பாடம். *அடரா - தாக்கா*;)

கடுத்தானே காலனைக் காலாற், கயிலாயம் 8
எடுத்தானை ஏதமாகம் முனிவர்க் கிடர்
கெடுத்தானே, கேழ் கிளரும் திருக் காறாயில்
அடுத்தானே, என்பவர் மேல் வினை ஆடாவே*.

(*கடுத்தான் - கோபித்து உதைத்தான்; ஏதம் ஆக முனிவர் - என்பது இசைக்காக ஏதமாகம்முனிவர் என்று வந்தது; இராவணனுக்கு ஏதம் (துன்பம்) ஆகுமாறும் முனிவர்களுக்கு இடர்கெடுமாறும் செய்தவன்; கேழ் - (ஒளிரும்) நிறம்;*
* "அடராவே" என்றும் பாடம். *அடரா - தாக்கா*;)

பிறையானே, பேணிய பாடலொ(டு) இன்னிசை 9
மறையானே, மாலொடு நான்முகன் காணாத
இறையானே, எழில் திகழும் திருக் காறாயில்
உறைவானே, என்பவர் மேல் வினை ஓடுமே.

(*இசை மறையான் - சாமவேதத்தவன்; இறையான் - இறைவன்; எங்கும் தங்கியவன்;*)

செடியாரும் புன்சமண் சீவரத்தார்களும் 10
படியாரும் பாவிகள் பேச்சுப் பயனில்லை
கடியாரும் பூம்பொழில்சூழ் திருக் காறாயில்
குடியாருங் கொள்கையினார்க்(கு) இல்லை குற்றமே.

(*செடி - தீநாற்றம்; சீவரத்தார்கள் - துவரூட்டிய உடையினை உடுத்தவர்கள் -*

*பௌத்தர்கள்; படி - பகை; பூமி; கடி - மணம்;. குடி ஆரும் கொள்கை - தலவாசம் புரியும் விரதம்; குற்றம் - ஆணவம் முதலியன;*)

ஏய்ந்தசீர் எழில்திகழும் திருக் காறாயில் 11
ஆய்ந்த சீரான் அடி ஏத்தி அருள்பெற்ற

பாய்ந்தநீர்க் காழியுள் ஞானசம்பந்தன் சொல்
வாய்ந்தவா(று) ஏத்துவார் வானுல காள்வாரே.

*(ஏய்ந்த - பொருந்திய. ஆய்ந்த சீர் - வேதாகமங்களுள் ஆராயப்பட்ட புகழ். பாய்ந்த நீர்க்காழி - நீர்வளம் மிக்க காழிப்பதி; வாய்ந்தவாறு - இயன்ற அளவில்;)*

5.92

## 5.92 திருநாவுக்கரசர் தேவாரம் - பொது - காலபாசத் திருக்குறுந்தொகை 5.92

கண்டுகொள் அரியானைக் கனிவித்துப் 1
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளம் கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே.

*(சூழல் - சூழாதேயுங்கள்;)*

நடுக்கத்துள்ளும் நகையுளும் நம்பர்க்குக் 2
கடுக்கக் கல்லவடம் இடுவார்கட்குக்
கொடுக்கக் கொள்க என உரைப்பார்களை
இடுக்கண் செய்யப் பெறீர் இங்கு நீங்குமே.

*(கல்லவடம் - மணி மாலைபோன்ற உருத்திராக்க மாலை; பறை எனினுமாம்;)*

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான் 3
சீர்கொள் நாமம் சிவனென்(று) அரற்றுவார்
ஆர்களாகிலும் ஆக அவர்களை
நீர்கள் சாரப் பெறீர் இங்கு நீங்குமே.

சாற்றினேன் சடை நீள்முடிச் சங்கரன் 4
சீற்றம் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்றவும் களிப்பட்ட மனத்தராய்ப்
போற்றி என்(று) உரைப்பார் புடை போகலே.

இறை என் சொல் மறவேல் நமன் தூதுவீர் 5
பிறையும் பாம்பும் உடைப் பெருமான் தமர்
நறவம் நாறிய நல்நறும் சாந்திலும்
நிறைய நீ(று) அணிவார் எதிர் செல்லலே.

வாம தேவன் வளநகர் வைகலும் 6
காமம் ஒன்(று) இலராய்க் கைவிளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏமமும் புனைவார் எதிர் செல்லலே.

*(வாமதேவன் - சிவன். சதாசிவமூர்த்தியாகிய இறைவனது வடக்கு நோக்கிய திருமுகம் வாமதேவமுகம் எனப்படும்; தாமம் -மாலை; ஏமம் - திருநீற்றுக்காப்பு;)*

படையும் பாசமும் பற்றிய கையினீர் 7
அடையன்மின் நமது ஈசன் அடியரை
விடைகொள் ஊர்தியினான் அடியார்குழாம்
புடைபுகாது நீர் போற்றியே போமினே.

விச்சை ஆவதும் வேட்கைமை ஆவதும் 8
நிச்சல் நீ(று) அணிவாரை நினைப்பதே
அச்சம் எய்தி அருகணையாது நீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே.

*(விச்சை - வித்தை, ஞானம், கல்வி; வேட்கைமை - பக்தி, விரும்புந்தன்மை; நிச்சல் - நாடோறும்; அருகு அணையாது - பக்கம் செல்லாமல்;)*

இன்னம் கேண்மின் இளம்பிறை சூடிய 9
மன்னன் பாதம் மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத்தாகிய மந்திரம்
தன்னில் ஒன்று வல்லாரையும் சாரலே.

மற்றும் கேண்மின் மனப்பரிப்(பு) ஒன்(று) இன்றிச் 10
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை ஏ(று) உடையான் அடியே அலால்
பற்(று) ஒன்(று) இல்லிகள் மேல் படை போகலே.

*(பரிப்பு - இயக்கம் (movement); மனப்பரிப்பு - மனத்தில் பிறிது ஒரு நினைப்பு;)*

அரக்கன் ஈரைந்தலையும் ஓர் தாளினால் 11
நெருக்கி ஊன்றி இட்டான்தமர் நிற்கிலும்
சுருக்கெனாது அங்குப் பேர்மின்கள் மற்று[ம்]நீர்
சுருக்கெனிற் சுடரான்கழல் சூடுமே.

*(ஈரைந்தலை - பத்துத்தலை; சுருக்கு - பாசத்தால் பிணித்தல்; சூடும் - சுடும் என்பது நீண்டது;)*

3.4

## 3.4 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருஆவடுதுறை 3.4

இடரினும் தளரினும் எனதுறு நோய் 1
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

வாழினும் சாவினும் வருந்தினும் போய் 2

வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழ்இளம் தடம் புனல் தயங்கு சென்னிப்
போழ்இள மதி வைத்த புண்ணியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

நனவினும் கனவினும் நம்பா உன்னை 3
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தும்மலொ டருந்துயர் தோன்றிடினும் 4
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதிள் எரிஎழ முனிந்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

கையது வீழினும் கழிவுறினும் 5
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும் 6
எந்தாய்உன் னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும் 7
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

பேரிடர் பெருகிஓர் பிணிவரினும் 8
சீருடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின் 9
ஒண்மலர் அடியலால் உரையாதென்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும் 10
அத்தாவுன் னடியலால் அரற்றாதென்நாப்
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த 11
இலைநுனை வேற்படை எம்இறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்

வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே.

2.24

## 2.24 திருஞானசம்பந்தர் தேவாரம் - திருநாகேச்சுரம் 2.24

பொன்நேர்தரு மேனியனே புரியும் 1
மின்நேர் சடையாய் விரை காவிரியின்
நன்னீர் வயல் நாகேச்சுர நகரின்
மன்னே என வல்வினை மாய்ந்தறுமே.

(*ஏர்தல் / நேர்தல் - ஒத்தல்; விரை - மணம்; மன் - அரசன்; தலைவன்;*)

சிறவார் புரமூன்று எரியச் சிலையில் 2
உற வார்கணை உய்த்தவனே உயரும்
நறவார் பொழில் நாகேச்சுர நகருள்
அறவா என வல்வினை ஆசறுமே.

(*சிறவார் - சிறக்காதவர்; சிலையில் உற - வில்லில் பொருந்த; வார் கணை - நீண்ட அம்பு; நறவு - தேன்; அறவன் - தருமசொரூபன்; ஆசு - குற்றம்;*)

கல்லால் நிழல் மேயவனே கரும்பின் 3
வில்லான் எழில் வேவ விழித்தவனே
நல்லார் தொழு நாகேச்சுர நகரில்
செல்வா என வல்வினை தேய்ந்தறுமே.

நகுவான் மதியோடு அரவும் புனலும் 4
தகுவார் சடையின் முடியாய் தளவம்
நகுவார் பொழில் நாகேச்சுர நகருள்
பகவா என வல்வினை பற்றறுமே.

(*நகு வான் மதி - விளங்கும் விண்ணில் ஊரும் திங்கள்; தளவம் - முல்லை; பகவா - கடவுளே;*)

கலைமான் மறியும் கனலும் மழுவும் 5
நிலையாகிய கையினனே நிகழும்
நலமாகிய நாகேச்சுர நகருள்
தலைவா என வல்வினைதான் அறுமே.

(*கலைமான்மறி - ஆண் மான்கன்று;*)

குரையார் கழலாட நடங் குலவி 6
வரையான் மகள் காண மகிழ்ந்தவனே
நரையார் விடையேறு நாகேச்சுரத்(து) எம்
அரைசே என நீங்கும் அருந்துயரே.

(*வரையான் - இமாசல ராசன்; நரை - வெண்மை; அரைசே - அரசனே;*)

முடையார்தரு வெண்தலைகொண்(டு) உலகில் 7
கடையார் பலிகொண்(டு) உழல் காரணனே
நடையார்தரு நாகேச்சுர நகருள்
சடையா என வல்வினைதான் அறுமே.

(*முடை - புலால்; நாற்றம்; கடை - கடை வாயில்; காரணன் - முதல்வன்; நடை - ஒழுக்கம்;*)

ஓயாத அரக்கன் ஒடிந்தலற 8
நீயா ரருள்செய்து நிகழ்ந்தவனே
வாயார வழுத்துவர் நாகேச்சுரத்
தாயே என வல்வினைதான் அறுமே.

*(ஆரருள் - பூரணகருணை; வாயார வழுத்துவர் - வாயாரப்பாடுந் தொண்டர்; நாகேச்சுரத்தாயே - நாகேச்சுரத்(து) ஆயே / நாகேச்சுரத் தாயே ; ஆய் = தாய்;)*

நெடியானொடு நான்முகன் நேடலுறச் 9
சுடுமால் எரியாய் நிமிர் சோதியனே
நடுமா வயல் நாகேச்சுர நகரே
இடமா உறைவாய் என இன்புறுமே.

*(நேடல் - தேடுதல்; மால் - பெரிய; நடு - நாற்று நடுகின்ற; மா வயல் - நீள் கழனி;)*

மலம்பாவிய கையொடு மண்டைய(து) உண் 10
கலம் பாவியர் கட்டுரை விட்(டு) உலகில்
நலம் பாவிய நாகேச்சுர நகருள்
சிலம்பா எனத் தீவினை தேய்ந்தறுமே.

*(மலம் பாவிய - அழுக்குப் பரவிய; மண்டையது உண்கலம் பாவியர் - மண்டை என்ற பெயர் உடைய உண்கலம் ஏந்தும் தீவினையுடையவர்கள்; கட்டுரை - பொய்;)*

கலமார் கடல்சூழ்தரு காழியர்கோன் 11
தலமார்தரு செந்தமிழின் விரகன்
நலமார்தரு நாகேச்சுரத்(து) அரனைச்
சொல மாலைகள் சொல்ல நிலா வினையே.

*(விரகன் - அறிஞன்; நிலா - நில்லா;)*

4.66

## 4.66 திருநாவுக்கரசர் தேவாரம் - திருநாகேச்சரம் 4.66

கச்சைசேர் அரவர் போலும் கறையணி மிடறர் போலும் 1
பிச்சைகொண் டுண்பர் போலும் பேரரு ளாளர் போலும்
இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச் சரவ னாரே.

*(கச்சை சேர் அரவர் - அரவக்கச்சை உடுத்தவர்; நச்சுவார் - விரும்புவார்;)*

வேடுறு வேடர் ஆகி விசயனோ டெய்தார் போலும் 2
காடுறு பதியர் போலும் கடிபுனற் கங்கை நங்கை
சேடெறி சடையர் போலும் தீவினை தீர்க்க வல்ல

நாடறி புகழர் போலும் நாகவீச் சரவ னாரே.

(*காடு - சுடுகாடு; சேடு - பெருமை; அழகு; எறித்தல் - ஒளிவீசுதல்;*)

கற்றுணை வில்ல தாகக் கடியரண் செற்றார் போலும் 3
பொற்றுணைப் பாதர் போலும் புலியதள் உடையர் போலும்
சொற்றுணை மாலை கொண்டு தொழுதெழு வார்கட் கெல்லாம்
நற்றுணை யாவர் போலும் நாகவீச் சரவ னாரே.

(*கல் + துணை + வில் - மேருமலையாகிய (போர்க்குத்) துணைக்கருவியான வில்; கடி அரண் - காவல் மும்மதில்; பொன் துணைப் பாதம் - பொன்னை ஒத்த திருவடி; அதள் - தோல்; சொற்றுணை மாலை - பாமாலை;*)

கொம்பனாள் பாகர் போலும் கொடியுடை விடையர் போலும் 4
செம்பொனார் உருவர் போலும் திகழ்திரு நீற்றர் போலும்
எம்பிரான் எம்மை ஆளும் இறைவனே என்று தம்மை
நம்புவார்க் கன்பர் போலும் நாகவீச் சரவ னாரே.

(*கொம்பு - பூங்கொம்பு (twig); அன்னாள் - நிகர்த்தவள்; கொடியுடைவிடையர் - இடபக்கொடி உடையவர்; நம்புவார் - விரும்புவார்;*)

கடகரி உரியர் போலும் கனல்மழு வாளர் போலும் 5
படஅர வரையர் போலும் பாரிடம் பலவுங் கூடிக்
குடமுடை முழவம் ஆர்ப்பக் கூளிகள் பாட நாளும்
நடநவில் அடிகள் போலும் நாகவீச் சரவ னாரே.

(*கடகரி உரியர் - மதயானைத் தோலுடுத்தவர்; படஅரவு அரையர் - படத்தையுடைய பாம்பைத் தன் இடையில் கட்டியவர். பாரிடம் - பூதம்; குடமுடை முழவம் - 'குடமுழா' என்ற வாத்தியம்; கூளி - பேய்;*)

பிறையுறு சடையர் போலும் பெண்ணொரு பாகர் போலும் 6
மறையுறு மொழியர் போலும் மால்மறை யவன்த னோடும்
முறைமுறை அமரர் கூடி முடிகளால் வணங்க நின்ற
நறவமர் கழலர் போலும் நாகவீச் சரவ னாரே.

(*மறையவன் - பிரமன்; நறவு - தேன்;*)

வஞ்சகர்க் கரியர் போலும் மருவினோர்க் கெளியர் போலும் 7
குஞ்சரத் துரியர் போலும் கூற்றினைக் குமைப்பர் போலும்
விஞ்சையர் இரிய அன்று வேலைவாய் வந்தெ முந்த
நஞ்சணி மிடற்றர் போலும் நாகவீச் சரவ னாரே.

(*மருவினோர் - அன்போடு அடைந்தவர்கள்; குஞ்சரம் - யானை; உரி - தோல்;*

*குமைப்பர் - அழிப்பர்; விஞ்சையர் - விஞ்சையர் முதலிய தேவர்கள்; இரிதல் - அஞ்சி ஓடுதல்; வேலை - கடல்;)*

போகமார் மோடி கொங்கை  புணர்தரு புனிதர் போலும் 8
வேகமார் விடையர் போலும்  வெண்பொடி யாடு மேனிப்
பாகமால் உடையர் போலும்  பருப்பத வில்லர் போலும்
நாகநாண் உடையர் போலும்  நாகவீச்ச சரவ னாரே.

(*போகம் - இன்பம். மோடி - துர்க்கை; பருப்பத வில் - மேருவில்;*)

கொக்கரை தாளம் வீணை  பாணிசெய் குழகர் போலும் 9
அக்கரை அணிவர் போலும்  ஐந்தலை அரவர் போலும்
வக்கரை அமர்வர் போலும்  மாதரை மையல் செய்யும்
நக்கரை உருவர் போலும்  நாகவீச் சரவ னாரே.

(*கொக்கரை தாளம் வீணை - இசைக்கருவிகள்; குழகர் - அழகர்; இளையவர்; அக்கு - சங்கு மணி; அரை - இடை; ஐந்தலை அரவு - ஐந்து தலை நாகம்; வக்கரை - திருவக்கரை என்ற தலம்; நக்கு - நிர்வாணம்;*)

வின்மையால் புரங்கள் மூன்றும்  வெந்தழல் விரித்தார் போலும் 10
தன்மையால் அமரர் தங்கள்  தலைவர்க்கும் தலைவர் போலும்
வன்மையால் மலையெ டுத்தான்  வலியினைத் தொலைவித் தாங்கே
நன்மையால் அளிப்பர் போலும்  நாகவீச் சரவ னாரே.

(*வின்மை - வில்வன்மை; வன்மை - ஆற்றல்; வலிமை; வலி - வலிமை;*)

7.1

## 7.1 சுந்தரர் தேவாரம் - திருவெண்ணெய்நல்லூர் 7.1

பித்தா பிறைசூட பெருமானே அருளாளா 1
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் 2
பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகா அருள்பெற்றேன்
வேயார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆயா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப் 3
பொன்னே மணிதானே வயிரம்மே பொருதுந்தி
மின்னார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அன்னே உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றம் ஊர்தீ 4
கொடியேன் பல பொய்யே உரைப்பேனைக் குறிக்கொள்நீ
செடியார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அடிகேள் உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

பாதம் பணிவார்கள் பெறுபண்டம் அது பணியாய் 5
ஆதன் பொருளானேன் அறிவில்லேன் அருளாளா
தாதார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆதீ உனக்காளாய் இனிஅல்லேன் எனல் ஆமே.

தண்ணார் மதிசூட தழல் போலும் திருமேனீ 6
எண்ணார் புர[ம்]மூன்றும் எரி உண்ண நகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அண்ணா உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய் 7
வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்
தேனார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆனாய் உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

ஏற்றார் புரம்மூன்றும் எரி உண்ணச் சிலை தொட்டாய் 8
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர் வான்நீர்
ஏற்றாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆற்றாய் உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

(*செக்கர் - ஆகுபெயராய், சடையைக் குறித்தது; வான் நீர் - கங்கை;
ஆற்றாய் - நன்னெறி ஆனவனே;*)

மழுவாள் வலன்ஏந்தீ மறைஓதீ மங்கைபங்கா 9
தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உன தொழிலே
செழுவார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அழகா உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

காரூர் புனலெய்திக் கரை கல்லித் திரைக் கையால் 10
பாரூர் புகழெய்தித் திகழ்பன்மா மணியுந்திச்
சீரூர் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன் எனல் ஆமே.

(*இத்திருப்பாடல் தம்மைப்பிறர் போலவும், இறைவனைப் படர்க்கையிலும் வைத்து
அருளிச் செய்த திருக்கடைக்காப்பு.*)

7.39

## 7.39 சுந்தரர் தேவாரம் - திருத்தொண்டத் தொகை

7.39

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் 1
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன் 2
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன் 3
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட 4
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மண[ம்]நாற மலரும் 5
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே 6
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(*வார் - கச்சு. வனம் - அழகு. சீர் - சிறப்பு. கார்கொண்ட - மேகம் போன்ற. ஆர் - கூர்மை. களந்தை, ஊர்ப் பெயர்;*)

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன் 7
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(*வரிசிலை - கட்டப்பட்டு அமைந்த வில்; வரிஞ்சை - ஊர்ப்பெயர். `வரிஞ்சையர்கோன் கழற் சத்தி` என மாற்றி உரைக்க;*)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த 8
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(*நிறைக்கொண்ட, துறைக்கொண்ட, அறைக்கோண்ட - மூன்றிலும் ககர ஒற்று, விரித்தல் விகாரம்;*)

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் 9
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்

ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(*மடல் - இதழ்; தார் - மாலை; அதள் - தோல்; 'ஆடி' என்றது பெயர். அடல் - வெற்றி;*)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன் 10
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆருரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல் 11
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆருரில் அம்மானுக் கன்பரா வாரே.

(*என்னவன் - எனக்கு உரியவன்; காதலன் - மகன்;*)

8.37 8.37

## 8.37 திருவாசகம் - பிடித்த பத்து

உம்பர்கட் கரசே, ஒழிவற நிறைந்த யோகமே, ஊற்றையேன் தனக்கு 1
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே, சீருடைக் கழலே, செல்வமே சிவபெருமானே,
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

(*ஊற்றையேன் - அழுக்கினை உடையேன்; மருந்து - அமுதம்;* )

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே, வினையனேன் உடையமெய்ப் பொருளே, 2
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய் முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட கடவுளே, கருணைமா கடலே,
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே, அன்பினில் விளைந்த ஆரமுதே, 3
பொய்ம்மையே பெருக்கிப், பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே, சிவபெருமானே,
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

அருளுடைச் சுடரே, அளிந்ததோர் கனியே, பெருந்திறல் அருந்தவர்க் கரசே, 4
பொருளுடைக் கலையே, புகழ்ச்சியைக் கடந்த போகமே, யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த செல்வமே, சிவபெருமானே,
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

(*பொருளுடைக் கலை - மெய்ந்நூல்; தெருள் - தெளிவு;*)

ஒப்புனக் கில்லா ஒருவனே, அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே, 5
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு விழுமிய தளித்ததோர் அன்பே,
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ, செல்வமே, சிவபெருமானே,
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

(*வீறிலி - பெருமையிலி; எய்ப்பிடத்து - இளைப்பின்கண்;*)

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்(டு) அளவிலா ஆனந்த மருளிப் 6
பிறவிவேர் அறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா, பெரியஎம் பொருளே,
திறவிலே கண்ட காட்சியே, அடியேன் செல்வமே, சிவபெருமானே,
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

(*அறவை - துணையிலி; திறவு - திறப்பு, - அறியாமை நீங்கிய நிலை; இறவு - இறுதி - முடிவு;* )

பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப் பற்றுமா றடியனேற் கருளிப் 7
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே,
தேசுடை விளக்கே, செழுஞ்சுடர் மூர்த்தீ, செல்வமே, சிவபெருமானே,
ஈசனே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

அத்தனே, அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே, யாதும்ஈ றில்லாச் 8
சித்தனே, பத்தர் சிக்கெனப் பிடித்த செல்வமே, சிவபெருமானே,
பித்தனே, எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

(*எத்தன் - சூழ்ச்சியுடைவன்;* )

பால்நினைத் தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய 9
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து, புறம்புறந் திரிந்த செல்வமே, சிவபெருமானே,
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென் 10
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசனே, மாசிலா மணியே,
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந் தொடக்கெலாம் அறுத்தநற் சோதி
இன்பமே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

## 9.20 கண்டராதித்தர் அருளிச்செய்த திருவிசைப்பா - கோயில் (சிதம்பரம்)

மின்னார் உருவம் மேல்வி ளங்க வெண்கொடி மாளிகைசூழப் 1
பொன்னார் குன்றம் ஒன்று வந்து நின்றது போலும்என்னாத்
தென்னா என்று வண்டு பாடும் தென்தில்லை அம்பலத்துள்
என்னா ரமுதை எங்கள் கோவை என்றுகொல் எய்துவதே.

ஓவா முத்தீ அஞ்சு வேள்வி ஆறங்க நான்மறையோர் 2
ஆவே படுப்பார் அந்த ணாளர் ஆகுதி வேட்டுயர்வார்
மூவா யிரவர் தங்க ளோடு முன்அரங் கேறிநின்ற
கோவே உன்றன் கூத்துக் காணக் கூடுவ தென்றுகொலோ.

முத்தீ யாளர் நான்ம றையர் மூவாயி ரவர்நின்னோ(டு) 3
ஒத்தே வாழுந் தன்மை யாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தே என்று வண்டு பாடுந் தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்றன் ஆடல் காண அணைவதும் என்றுகொலோ.

மானைப் புரையும் மடமென் நோக்கி மாமலை யாளோடும் 4
ஆனஞ் சாடும் சென்னி மேல்ஓர் அம்புலி சூடும்அரன்
தேனைப் பாலைத் தில்லை மல்கு செம்பொனின் அம்பலத்துக்
கோனை ஞானக் கொழுந்து தன்னைக் கூடுவ தென்றுகொலோ.

களிவான் உலகிற் கங்கை நங்கை காதலனே அருளென்(று) 5
ஒளிமால் முன்னே வரங்கி டக்க உன்னடி யார்க்கருளும்
தெளிவார் அமுதே தில்லை மல்கு செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே உன்னை நாயேன் உறுவதும் என்றுகொலோ.

பாரோர் முழுதும் வந்தி றைஞ்சப் பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்தான் 6
வாரார் முலையாள் மங்கை பங்கன் மாமறை யோர்வணங்கச்
சீரால் மல்கு தில்லைச் செம்பொன் அம்பலத் தாடுகின்ற
காரார் மிடற்றெம் கண்ட னாரைக் காண்பதும் என்றுகொலோ.

இலையார் கதிர்வேல் இலங்கை வேந்தன் இருபது தோளும்இற 7
மலைதான் எடுத்த மற்ற வற்கு வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால் புரமூன் றெய்த வில்லி செம்பொனின் அம்பலத்துக்
கலையார் மறிபொற் கையி னானைக் காண்பதும் என்றுகொலோ.

வெங்கோல் வேந்தன் தென்னன் நாடும் ஈழமுங் கொண்டதிறல் 8
செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடி ஆடும் அணிதில்லை அம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம்மி றையை என்றுகொல் எய்துவதே.

(*தென்னன் - பாண்டியன்; கோழி - உறையூர்; செம்பியன் - சோழன்;*)

நெடியா னோடு நான்மு கன்னும் வானவரும் நெருங்கி 9
முடியால் முடிகள் மோதி உக்க முழுமணி யின்திரளை
அடியார் அலகி னால் திரட்டும் அணிதில்லை யம்பலத்துக்
கடியார் கொன்றை மாலை யானைக் காண்பதும் என்றுகொலோ.

சீரால் மல்கு தில்லைச் செம்பொன் அம்பலத் தாடிதன்னைக் 10
காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர் கோன்கலந்த
ஆரா இன்சொற் கண்டரா தித்தன் அருந்தமிழ் மாலைவல்லார்
பேரா உலகில் பெருமை யோடும் பேரின்பம் எய்துவரே.

9.29

## 9.29 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு 9.29

மன்னுக தில்லை; வளர்கநம் பத்தர்கள்; வஞ்சகர் போயகல; 1
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க;
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக் கருள்புரிந்து,
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள்; மெய்யடியார்கள் விரைந்து வம்மின்; 2
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்(கு)ஆட் செய்மின்; குழாம்புகுந்து,
அண்டங் கடந்த பொருள், அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்,
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

(*மிண்டு மனம் - உருகாத மனம்; குழாம் - திருக்கூட்டம்;*)

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான், 9
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன், மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து, நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

(*ஆலித்தல் - ஒலித்தல்; பாலித்து - அருளை வழங்கி;*)

தாதையைத் தாளற வீசிய சண்டிக்(கு)அவ் அண்டத்தொடும் உடனே 10
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளிச்,
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்,
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

(சண்டி - சண்டேசுர நாயனார்; போனகம் - தான் உண்டு எஞ்சிய உணவு;
தாமம் - கொன்றை மாலை. நாமம் - 'சண்டன்' என்னும் சிறப்புப் பெயர்;)

10.

## 10. திருமூலர் அருளிய திருமந்திரம் 10.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை 71

ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார் 269
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும் 2654
ஒன்று கண்டீர் உலகுக் குயிராவது
நன்று கண்டீர்இனி நமச்சிவா யப்பழம்
தின்று கண்டேற்கிது தித்தித்த வாறே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர் 2673
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

வான்நின்று இடிக்கில்என் மாகடல் பொங்கில்என் 2805
கான்நின்ற செந்தீக் கலந்துடன் வேகில்என்
தான்ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில்என்
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே.

## 11. பதினொன்றாம் திருமுறை

11.3.6 சங்கரனைத், தாழ்ந்த சடையானை, அச்சடைமேல் 11.3.6
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை, - அங்கொருநாள்
ஆவாவென் றாழாமைக் காப்பானை, எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை.

- *காரைக்கால் அம்மையார் அருளிய திருவிரட்டைமணிமாலை 6*

11.4.61 அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன் 11.4.61
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?

- *காரைக்கால் அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதி 61*

11.4.81 காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம் 11.4.81
மேலை இருவினையும் வேறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீஅம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

- *காரைக்கால் அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதி 81*

11.6.20 கொடிமேல் இடபமும், கோவணக் கீளும், ஓர் கொக்கிறகும், 11.6.20
அடிமேற் கழலும், அகலத்தில் நீறும், ஐவாய் அரவும்,
முடிமேல் மதியும், முருகலர் கொன்றையும், மூவிலைய
வடிவேல் வடிவும் என் கண்ணுள் எப்போதும் வருகின்றவே.
*- சேரமான் பெருமாள் நாயனார் அருளிய பொன்வண்ணத்தந்தாதி 20*

11.6.26 விரிகின்ற ஞாயிறு போன்றது மேனி; அஞ் ஞாயிறு சூழ்ந்(து) 11.6.26
எரிகின்ற வெங்கதிர் ஒத்தது செஞ்சடை; அச்சடைக் கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டம்; அக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுளதால் எந்தை ஒண்பொடியே.
*- சேரமான் பெருமாள் நாயனார் அருளிய பொன்வண்ணத்தந்தாதி 26*

11.9.38 விளையும் வினைஅரவின் வெய்ய விடத்தைக் 11.9.38
களைமினோ, காளத்தி ஆள்வார்- வளைவில்
திருந்தியசீர் ஈசன் திருநாமம் என்னும்
மருந்தினைநீர் வாயிலே வைத்து.
*- நக்கீரதேவ நாயனார் அருளிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 38*

11.9.39 வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித் 11.9.39
தீய பிறவிநோய் தீர்க்குமே - தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு, கயிலாயத்(து)
எம்பெருமான் ஓரஞ் செழுத்து.
*- நக்கீரதேவ நாயனார் அருளிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 39*

11.38.44 யாரேஎம் போல அருளுடையார், இன்கமலத் 11.38.44
தார்ஏயுஞ் சென்னித் தமிழ்விரகன் - சீர்ஏயும்
கொச்சைவயன்தன் குரைகழற்கே - மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து.
*- நம்பியாண்டார் நம்பி அருளிய ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் 44*

12 12

## 12. சேக்கிழார் அருளிய பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்; 12.0001
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்;
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச் 12.0350
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி 12.0351
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிறத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

பேறினி இதன்மேல் உண்டோ? பிரான்திருக் கண்ணில் வந்த 12.0829
ஊறுகண்டு அஞ்சித் தம்கண் இடந்தப்ப உதவும் கையை
ஏறுயர்த் தவர்தம் கையால் பிடித்துக்கொண்டு என்வ லத்தில்
மாறிலாய் நிற்க என்று மன்னுபேர் அருள்பு ரிந்தார்.
*- பெரிய புராணம் - கண்ணப்ப நாயனார் புராணம்.*

வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர், 12.1264
அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்;
இந்த நிலைமை அறிந்தார்ஆர்? ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றோ சாற்றுங்கால்.
*- பெரிய புராணம் - சண்டேசுர நாயனார் புராணம்.*

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால் 12.4281
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

## வாழ்த்து

3.54.1 வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் 3.54.1
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
*- (திருஞான சம்பந்தர் தேவாரம்)*

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்!
*- (கந்த புராணம் - கச்சியப்ப சிவாசாரியார்)*